**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.45/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | சந்தோஷ்குமார், வயது 21 |
| Father Name/Husband Name | : | பெரியசாமி |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பட்டதாரி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of May 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்த பெரியசாமி எனது அப்பா. எதிரியை தெரியும் சம்பவத்தன்று எனது அப்பா மீது இருச்சக்கர வாகனத்தில் ஏற்றி விபத்து ஏற்படுத்தியவர். கடந்த 20.05.2023 ஆம் தேதி இரவு 09.00 மணிக்கு எனது அப்பா கோவில்பட்டி கண்ணன் சில்க்ஸ் ஜவுளி கடையில் வேலை பார்த்துவிட்டு கழுகுமலை ஆறுமுகநகரில் உள்ள ஆஞ்சநேயர்கோவில் அருகே நடந்து வந்து கொண்டிருந்தார்.
2. அப்போது எதிரி எதிரே அதிவேகமாகவும் அஜாகிரதையாயவும் குடித்துவிட்டு TN 96 B 0447 என்ற Hero Splender வாகனத்தில் வந்து மோதி விபத்தி ஏற்படுத்தினார். மேற்படி விபத்தில் எனது அப்பா மல்லாக்க விழுந்தததில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வந்தது.
3. பின்னர்சம்பவ இடத்தில் நானும் பூமணி என்பவரும் அங்கிருந்து எனது அம்மாவிற்கு போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு அங்குள்ள ஆம்புலன்ஸ் மூலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம். தலையில் காயம்பட்டதால் அங்கு பார்க்க முடியாது என்று சொன்னபடியால் மேல் சிகிச்சைக்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.
4. இரவு 11.00 மணிக்கு அங்கு சென்றோம். எனது அப்பா சுயநினைவு இல்லாமல் இருந்ததால் போலிசார் வந்து விசாரித்த போது நான் நடந்த விவரங்களை சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதற்கு அறிவேன் சாட்சியாக

எனது அம்மாவும் கையொப்பம் செய்துள்ளார். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. சிகிச்சையில் இருந்த எனது அப்பா சிகிச்சை பலன் இன்றி மறுநாள் இரவு 08.20 மணிக்கு இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். பின்னர் எனது அப்பாவின் உடலை பிரேத விசாரணை செய்து பெற்றுக்கொண்டேன். பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. விபத்து நடந்த நேரம் இரவு 09.00 மணி என்றாலும் இருட்டான பகுதி என்றாலும் சரிதான். கழுகுமலை பேருந்து நிலையித்தின் மேற்கு பக்கத்தில் சாலையில் வேகத்தடை உள்ளது என்றால் இல்லை. தென்வடல் ரோட்டின் கிழக்கு பக்கத்தில் சம்பவம் நடந்தது என்றால் தெற்கில் இருந்து வடக்கு செல்லும் ரோட்டின் இடது பக்கம் நடந்தது.
2. எதிரி வந்த வாகனத்தின் இடது பக்கம் என்றால் எனது அப்பா நடந்து சென்றதற்கு இடது பக்கம். சம்பவ இட தார் சாலையின் இரு பக்கமும் தார் சாலையை விட தாழ்வாக மண் பகுதி உள்ளது என்றால் இல்லை சாலைக்கு சமமாக தான் இருக்கும்.
3. சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் பெரிய ஊரணி உள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலையில் விழும் மழைநீர் அந்த ஊரணிக்கு தான் செல்லும் என்றால் சரிதான். தார்சாலையின் இருபக்கம் உள்ள மண் பகுதி சாலையை விட தாழ்வாக தான் இருக்கும் என்றால் இடது பக்கம் சமமாக இருக்கும்வலது பக்கம் சற்று தாழ்வாக இருக்கும்.
4. விபத்துக்குண்டான வாகனம் உங்களை கடந்து சென்று தான் விபத்து ஏற்படுத்தியதாக போலிசார் விசாரணையில் சொன்னீர்கள் என்றால் இல்லை எதிரே வந்த வாகனம் என்று சொன்னேன். விபத்தை ஏற்படுத்திய வாகனம் சிவப்பு நிற ஸ்பிளண்டர் பிளஸ் வாகனம் என்றால் இல்லை கருப்பு வெள்ளை.
5. விபத்து நேரத்தில் இரண்டு நபர்கள் மேற்படி இருச்சக்கர வாகனத்தில் வந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னீர்கள் என்றால் இல்லை. உங்கள் அப்பாவிற்கு இரத்தக்கொதிப்பு இருந்து வந்தது என்றால் இல்லை.
6. கழுகுமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் என்ன சம்பவம் நடந்தது என்றுகேட்டார்களா என்றால் கேட்டார்கள் சொன்னீர்களா என்றால் சொன்னேன். முதல் உதவி சிகிச்சை கொடுத்தார்களா என்றால் இல்லை. உங்கள் அப்பாவிற்கு ஏற்பட்ட காயத்தை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள்.
7. அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு

பரிந்துரைக்கும்போது கழுகமலை மருத்துவமனையில் கடிதம் கொடுத்தார்களா என்றால் கழுகுமலை மருத்துவமனையில் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. கழுகுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கோவில்பட்டி சசிமருத்துவமனைக்கு கூட்டி வந்தீர்கள் என்றால் ஆம்.

8. விபத்து காலத்திற்கு முன்பு உங்கள் அப்பா இதய நோயால் பாதிக்கப்பட்டு இதய அறுவை சிகிச்சை செய்திருந்தார் என்றால் சரிதான். சசி மருத்துவமனையில் உங்களுக்கு கடிதம் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. உங்கள் அப்பாவிற்கு சர்க்கரை வியாதி உண்டா என்றால் இல்லை.
9. கோவில்பட்டி சசி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த விவரத்தை போலிசார் விசாரிக்கும் போது சொன்னீர்களா என்றாம் ஆம். உங்கள் அப்பாவின் இதச அறுவை சிகிச்சை செய்த அறிக்கைகளை பார்த்தால் உங்கள் அப்பாவிற்கு சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு இருந்தததா என்ற விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான்.
10. திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று உங்கள் அப்பாவிற்கு ஏற்பட்ட காயம் எதனால் எங்கு ஏற்பட்டது என்று சொன்னீர்களா என்றால் ஆம். சம்பவ நேரத்தில் உங்கள் அப்பாவிற்கு இரத்த உயர் அழுத்தம் ஏற்பட்டு தார் சாலையில் இருந்து மண்சாலையில் விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றும் அந்த காயத்திற்கு சிகிச்சை பெற கழுகுமலை அரசு மருத்துவமனைக்கும், கோவில்பட்டி சசி மருத்துவமனைக்கும் சிசிக்சைக்கு சேர்த்தோம் என்றாலும் அந்த மருத்துவமனையில் உள்ள விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ பதிவேடுகள் இந்த வழக்கிற்கும் விரோதமாக உள்ளதால் மேற்படி சிகிச்சைகளை மறைத்து நீங்கள் புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.
11. விபத்து இழப்பீடு கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். இரத்த அழுத்ததால் தார் சாலையில் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதால் காப்பீடு கிடைக்காது என்பதற்காக இழப்பீடு பெற எதிரிமீதும் எதிரியின் வாகனத்தின் மீதும் பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால்சரியல்ல. சம்பவ நேரத்தில் எதிரி அதிவேகமாகவும் அஜாகிரதையாயவும் வண்டியை ஓட்டி வந்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.
12. சம்பவம் நடந்த முதல் நாள் முதல் மறுநாள் வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் கழுகுமலை காவல்நிலையத்திற்கு யார் போனார் என்றால் யாரும் போகவில்லை. விபத்து சம்பந்தமாக யார் கழுகுமலை காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னது என்றால் நான் சம்பவத்திற்கு மறுநாள் 11.00 மணிக்கு காவல்நிலையம் சென்றேன்.

13. காவல்நிலையத்தில் வைத்து போலிசார் சம்பவம் பற்றி கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். நீங்கள் சொன்ன விவரத்தைபோலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நீங்கள் காவல்நிலையத்தில் சொன்ன விவரங்களை வைத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிடுவதாக சொன்னார்கள் என்றால் இல்லை முதல் நாள் மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தேன்.
14. முதல் நாள் நீங்கள் கொடுத்த வாக்குமூலத்தை எத்தனை பக்கங்கள் எழுதினார்கள் என்றால் ஒன்றரை பக்கம் எழுதினார்கள். அதில் கையொப்பம் கேட்டார்களா என்றால் ஆம். நீங்கள் கையொப்பம் செய்தீர்களா என்றால் ஆம். நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எந்த புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.
15. நீங்கள் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உங்கள் அப்பா இறந்த பின்னர் கழுகுமலை காவல்நிலையத்திற்கு போனீர்களா என்றால் இல்லை. இறந்த நபர் உங்கள் அப்பா என்பதால் சம்பவத்தினை நேரில் பார்த்ததாக வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் அப்பாவிற்கு ஏற்பட்ட காயம் வழக்கில் சொன்னவாறு எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.